www.padippakam.com



# ாக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

## ாசகர்களுக்கு மனம் விட்டு ல விடயங்கள்...

பொதுவாக உலகத்திலே பிறக்கக் கூடிய எல்லாக் குழந்தைகளுக் தாயின் கருவிலிருக்கும் த அவற்றின் எதிர்காலம் இரண்டு விடயங்கள் தீர் ப் படுகின்றன. ஒன்று மற்றது மதம்.

ால் தமிழர்களாகிய நம நாம் நம் தாயின் வயிற் க்கும் காலத்தில் மூன்று வகள் தீர்மானிக்கப்படு ன. முதலாவது - சாதி, ாவது - மதம், மூன்றா ழி.

லயே ரோமானியர் ரேக்கர்கள், எகிப்தியர் பால பழம் பெரும் நாகரிகத்தைக் கொண்டவர்கள் நாங்கள்.

இன்று ரோமானியர்களும், கிரேக்கர்களுக்கும், எகிப்தியர்களுக்கும் என்று ஒவ்வொரு நாடிருக்கிறது. அவர்கள் தங்கள் சாந்த நாட்டிலே சொந்த மண்ணிலே சுதந்திர மனிதர்க வாழ்க்கை நடத்திக் ண்டிருக்கிறார்கள். ஆனால், மா நாடற்றவர்களாக, வீட வர்களாக சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பட்ட ர்களாக, நாடோடிகள் போல் வலமான ஒரு வாழ்க்கை த்திக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய மண் எங்களுடைய தேசம் இன்னமும் அடிமைப் படுத்தப் பட்டுப்போய்த் ன் இருக்கிறது. எங்களை யொத்த வரலாறு கொண்ட நாடுகள் எல்லாம் எப்போதோ தங்களது அடிமைத்தனத்தை சுகர்த்தெறிந்துவிட்டபோதிலும் ங்கள், இன்னமும் இப்போ ம இதே நிமிடம் வரை கூட எமது மண்ணை மீட்க, எமது தேசத்தை விடுவிக்கப் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம்.

'கல்தோன்றி, மண்தோன்றா காலத்தே, வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி' என்று பெருமை பேசிக் கொள்ளும் நாம், கல்தோன்றி, மண் தோன்றி, மனிதன் தோன்றி அதற்கப்பால் இயந்திர மனிதன் தோன்றி விட்ட காலத்தைய வரலாற்றைக் கொண்ட குடிகள் (இனங்கள்) கூட விடுதலையடைந்து விட்ட பிறகும் நாம் இன்னமும் விடுதலையடையாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று சிந்தித்துப் பார்க்கின்றோமா?

எங்களுக்கு எங்களைப்பற்றி என்ன தெரியும்?

முதலில் நாங்கள் என்ன சாதி என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்த சாதி உயர்ந்ததா, தாழ்ந்ததா, அதன் மகத்துவம் என்ன என்று சாதிப் பெருமை பேசத் தெரியும்.

அடுத்து எங்களுடைய மதம் என்ன என்பது எங்களுக்கு தெரியும். அதன் பெருமை பேசவும் எங்களுக்கு தெரியும். ஆனால், இந்த மதமே எங்களை உயர்ந்தவன் தாழ்ந்தவன் தீண்டப்படாதவன் என்று பிரித்து வைக்கவும் பிளவு படுத்தவும் காரணமாக இருந்திருக்கிறது என்பதையிட்டு நாங்கள் கவலைப்படுவதில்லை. அதெல்லாம் கர்மவினை பிறவிப்பயன் என்று வியாக்கியனம் சொல்ல எங்களுக்குத் தெரியும்.

அடுத்து எங்களது ஊர் பிரதேசம் என்ன என்பது எங்களுக்கு தெரியும் எங்களுடைய ஊர், எங்களுடைய பிரதேசம் மற்றவர்களுடைய பிரதேசத்தை விட எந்த வகையில் சிறந்தது இங்கே பிறந்ததனால் நாங்கள் எந்த வகையில் உயர்ந்தவர்கள் என்று தற் பெருமை பேசவும் அதைச் சொல்லியே அணிதிரளவும் எங்களுக்கு தெரியும்.

இந்த மூன்றுக்கும் பிறகு தான் நாங்கள் தமிழர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்' அதிலும் கூட யாழ்ப்பாணத் தமிழரா, வன்னித் தமிழரா, மட்டக்களப்பு தமிழரா என்று தரம் பிரித்துப் பார்க்கவும் தெரியும்.

இதெல்லாம் தெரிந்த எங்களுக்கு எங்களுடைய வரலாறு என்ன என்பது தெரியாது. எங்களுடைய தாய் தந்தையர் யார் என்பது எங்களுக்குத் தெரியும். அதற்கு அப்பால் அவர்களுடைய தாய் தந்தையார்கள் (பாட்டன், பாட்டி) யார் என்பது தெரியும். அதற்கும் அப்பால் அவர்களுடைய தாய் தந்தையர்கள் யார் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றி பலருக்கு தெரியவே தெரியாது.

உண்மையில் தாய் தந்தையர் யார் என்று தெரியாத குழந்தைகள் அநாதைகள் என்று அழைக்கப்படுவது போல, தங்களுடைய மூதாதையர்களுடைய வரலாறு தெரியாத ஒரு இனமும் 'வரலாற்று அநாதைகள்' என்றே அழைக்கப்படும். பெற்றோர்களை அறியாத ஒரு அநாதைக் குழந்தை தன்னுடைய வாழ்நாளில் எவ்வளவு கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்குமோ, எப்படி அது வழிகாட்டுதலின்றி சீரழிந்து போகுமோ, அப்படித்தான் தன்னுடைய சொந்த வரலாற்றை அறியாத இனமும் நெருக்கடிகளையும், துன்பங்களையும் சந்தித்து சீரழிந்து போகும்.

எங்களுடைய வரலாறு என்றவுடன் யாழ்ப்பாணத்தை சங்கிலி மன்னன் ஆண்டான். வன்னியை பண்டாரவன்னியன் ஆண்டான். காக்கை வன்னியன் காட்டிக் கொடுத்தான். போதுக்கேயர் வந்தார்கள், ஒல்லாந்தர்கள் வந்தார்கள், ஆங்கிலேயர்கள் வந்தார்கள் என்று தான் தெரியும்.

## தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

பௌத்த சிங்கள வரலாறு "சிங்களவர்களே எமது தாயகத்தின் பூர்வீகக் குடிகள் எனவும். நாமெல்லாம் வந்தேறு குடிகள்" எனவும் சொல்லி எமது வரலாற்றை திரித்து சிதைத்து மறைத்திருக்கிறது.

எங்களுடைய உண்மையான வரலாற்றையிட்டு எங்களுக்குள்ளேயே குழப்பங்களும், சந்தேகங்களும் இருந்து கொண்டிருக்கின்றன. எமது விடுதலைப் போராட்டம் இவ்வளவு கூர்மையடைந்த இன்றைய காலகட்டத்தில் கூட எமது வரலாற்றில் இருக்கும் குழப்பங்களையும், தூக்கியெறிந்து சரியான முறையில் எமது உண்மையான வரலாறு இதுதான் என்று ஒத்த கருத்தாக அடித்துச் சொல்வதற்கு நாம் இன்னமும் ஒன்று படுவதற்கு முடியாத நிலையிலேயே இருக்கின்றோம்.

நமது வரலாற்றை ஆய்வு செய்தவர்களை மூன்று விதமாக பிரிக்கலாம்.

முதலாவது - பார்ப்பனிய முகாமுக்குள் இருந்து கொண்டு மதம் சார்ந்த அடிப்படையில் ஆய்வு செய்தவர்கள்.

இரண்டாவது - ஒரு வரலாற்று மாணவனுக்கு, ஒரு வரலாற்று ஆய்வாளனுக்கு இருக்கக்கூடிய உண்மையான "தேடல்" கண்ணோட்டத்தின் அடிப்படையில் விஞ்ஞான பூர்வமாக அதை ஆய்வு செய்தவர்கள்.

மூன்றாவது பிரிவினர் சிறீலங்கா தேசியம் என்ற நடைமுறையிலில்லாத ஒரு வடிவத்தை கற்பிதம் செய்து கொண்டு அதனை அடிப்படையாகவைத்து காலனிய ஏகாதிபத்திய எஜமான்களின் நலன் என்ற கண்ணாடி வழியாக அதை ஆய்வு செய்தவர்கள்.

இதிலே மூன்றாவது பிரிவினர் தத்துவார்த்தம், விஞ்ஞானம் எல்லாம் பேசிக்கொண்டு தந்திரமான முறையிலும் திட்டமிட்ட அடிப்படையிலும் எமது பாரம்பரிய வரலாற்றுச் சான்றுகளுக்கு சிங்கள முலாம் பூசி பௌத்த சிங்கள வரலாற்றையே இலங்கையினதும், தமிழினத்தினதும் வரலாறாகக் காட்ட முற்பட்டு வந்திருக்கின்றனர்.

முதலாவது பிரிவினர் இந்த மூன்றாவது பிரிவினரின் வரலாற்று மோசடிக்கெதிராக தொடர்ச்சியான ஆய்வு யுத்தம் நடத்தி வந்திருக்கிறார்கள். இவர்களது ஆய்வுக்களம் என்பது பார்ப்பனிய அடிப்படையில் இருந்ததால் அது தவிர்க்க முடியாதபடி பௌத்த எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பௌத்த மதம் சிங்களவருக்கு மட்டும் சொந்தமான மதமல்ல. அப்படியானால் இன்றைக்கு பௌத்த மதம் பின்பற்றப் படுகின்ற ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், கம்பூச்சியா, பர்மா, சீனா உட்பட எல்லா நாடுகளிலும் சிங்களவர்களே இருந்திருக்க வேண்டும். உண்மையில் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதையும் தமிழகத்திலும் இலங்கையிலும் தமிழ் பௌத்த விகாரைகள் இருந்தன என்பதையும் இவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இதனால் பௌத்த விகாரைகள் இருந்த இடமெல்லாம் சிங்களவர்களின் பூர்வீகப் பிரதேசம் என்று வாதிடும் சிங்கள பௌத்த இனவாத வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்கு இவர்களை அறியாமலே இவர்கள் துணை போய்விட்டனர்.

இந்த இரு சாராரின் வாதப் பிரதிவாதங்கள் மோதல்கள் காரணமாக பக்கசார்பின்றி நமது வரலாற்றை விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்த பலரது உண்மையான ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் அடிபட்டுப்போய்விட்டன. வசதிக் குறைவுகள், போர்க்காலச் சூழல் இப்படிப்பட்ட பல்வேறு புறக்காரணிகளின் அடிப்படையில் இவர்களில் பலர் இந்த முயற்சிகளைக் கைவிட்டு புகலிட நாடுகளுக்கு வந்துவிட்டனர்.

இன்றைக்கு புகலிட நாடுகளிலே நமது இனம் ஒரு புறம் கலாச்சார சீரழிவுகளுக்கும், மறுபுறம் அந்நியமாதலுக்கும் இடையில் அகப்பட்டு, எமது சுய அடையாளத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருக்கும் நிலையில் எமது உண்மை வரலாற்றை வெளிக்கொணர்வது அவசியம் என எனக்குத் தோன்றுகிறது. நான் இந்தத் தொடரிலே எழுதப் போகின்ற விடயங்கள் கொஞ்சம் கனமானவையாக இருக்கலாம்.

அதற்காக இது நமக்கு தேவையற்றது என்று நீங்கள் தயவு செய்து ஒதுக்கிவிட வேண்டாம். நம்மைப்பற்றி நாம் அறிந்து கொள்வதென்பது ஒரு வரலாற்றுத் தேவை. இந்தத் தேவை கருதி இதை நீங்கள் படித்து, இது தொடர்பான ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் கருத்துக்களையும் முன்வைக்க வேண்டும்.

- நக்கீரன்




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

பத்திரிகைகள். சஞ்சிகைகள், இறக்குமதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள் மரக்கறி, கடலுணவு வகைகள், அன்பளிப்புப் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



காயத்திரி

210, Rue du Fg. St. Denis, 75010 Paris. - Mº: La Chapelle ou Gare du Nord

Tel: 42 09 22 43 - Fax: 46 07 90 34